பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர்: 15] சென்னை: புரட்டாசி 26உ (12—10—67) வியாழன் வெளியூர்: புரட்டாசி 27உ (13—10—67) வெள்ளி [இதழ்: 99

அறிவுக் களஞ்சியம் அண்ணுவின் ஆட்சியில் நெற்களஞ்சியம் தஞ்சையின் மாட்சி!

வரலாறுகள் பலகண்ட தஞ்சை மீண்டும் புது வரலாறு படைக்கிறது!

கழக ஆட்சியின் சாதனைப் பட்டியல்களில் மேலும் ஒரு வெற்றித் திட்டம்-- தமிழகத்தில் அக்டோபர் புரட்சி -- அமோக அறுவடை!

[எஸ். ஆர்

சில கிழமைகளுக்கு முன்பு கல்கத்தா இதழாளர் ஒருவர், 'தமிழகத்தில் ஓர் அக்டோபர் புரட்சி நடக்கப் போகிறது' என்று எழுதினர்; 'காரணம் இல்லாமல் அவர் அவ்வாறு எழுதவில்லை' என்பதனை, நேற்று தஞ்சை இரயில்நிலையத்தில், தமிழக முதல்வர் அண்ணு—மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம்—உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன்—விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி ஆகியோரும், மற்றும் அதிகாரிகளும், நிலவுடைமைக்காரர்களும், நிலத்தில் உழைப்போரும் பங்கு கொண்ட நிகழ்ச்சி ஒன்று நூற்றுக்கு நூறு மெய்ப்பித்துக் காட்டியது.

இரஷ்ய அக்டோபர் புரட்சியை ஒப்புவமை காட்டி—கழக ஆட்சியில், தமிழகம் இந்தத் திங்களில் பெறப்போகும் 'அமோக அறுவடை'யை விவரித்த அந்த நாளிதழ் எழுத்தாளரின் அரசியல் கற்பனை நயத்தினை மெய்ப்பிக்கும் வகையில் நேற்று தஞ்சை இரயில் நிலையத்தில், கோலாகலத்துக்கிடையே மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் நாடா ஒன்றைக் கத்தரிக்க—

வறுமை ஒழிந்தது--இருள் அகன்றது

என்பதனைக் காட்டும் வகையில், கரிய புகையினைக் கக்கிய வண்ணம் 44 பெட்டிகளில் ADT-27 நெல் மணிகளைச் சுமந்து கொண்டு, தனி இரயில் வண்டி ஒன்று தமிழகத்தின் தலைநகர் நோக்கிப் புறப்பட்டது!

அதே மத்திய அமைச்சர் துவக்கிவைக்க—மற்றுமொரு ஆறு லாரிகள், அறுவடையான நெல் மணிகளை ஏற்றிக் கொண்டு சென்னை நோக்கிப் புறப்பட்டன!

நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய முதலமைச்சர் அண்ணு அவர்கள், மொத்தச் செய்திக்கும் முத்தாய்ப்பு அளிக்கும் வகையில்,

"தமிழகம் இன்னும் சில நாட்களில் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு மட்டுமல்ல—உலகின் பல நாடுகளுக்கும் அரிசியை ஏற்றுமதி செய்யும்; இந்த வகையில், தஞ்சைத் தரணியில் உள்ள உழவர் பெருமக்களும், நிலவுடைமைக்காரர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் நிறைய காத்திருக்கின்றன"

என்று குறிப்பிட்டுப் பேசியிருப்பது, அந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டோரையும், எங்கணும் இருந்து அதனை மனக் கண்ணால் கண்டு மகிழ்ந்தோரையும் மற்ருெரு சம்பவம் நினைவுபடுத்தியே தீரும்.

ஓரிரு திங்களுக்குமுன், சேலம் பொதுக்கூட்டமொன்றில் பேசிய அண்ணு அவர்கள், தமது நெஞ்சத்தைத் திறந்து காட்டிப் பேசுகையில்,

"'ஒரு படி அரிசித் திட்டத்துக்கு யாரைக் கேட்டு வாக்குக் கொடுத்தாய்' என்று என்னை கேட்கிறார்கள், காங்கிரசில் உள்ள பெரியவர்கள்!

"பூனை தூங்கும் அடுப்பைக் காட்டி, 'எங்கே போவேன் சோற்றுக்கு' என அழும் குழந்தைகளுக்கு சமாதானம் சொல்ல முடியாமல் தவித்தாளே -- அந்தத் தாயைக் கேட்டு!

"அரிசி வாங்கக் கைக்குழந்தையுடன் பையையும் கொண்டுபோய் -- வரிசையில் காலை முதல் நின்று, பின்னர் ஏற்பட்ட குழப்பத்தில் — காலை முதல் நின்ற கால் கடுப்பில் குழந்தையைக் காப்பாற்றவும் முடியாமல், தூக்கிச் சென்ற குழந்தையை உயிருடன் பறிகொடுத்து விட்டு வீட்டுக்கு வெறுங் கையுடன் — வெறும் பையுடன் திரும்பினாளே — அந்தப் பெற்றவளைக் கேட்டு!

"அவளைப்போல், காங்கிரசு ஆட்சியில் உணவுக்கு இன்னல்கள் அனுபவித்த மற்றவர்களைக் கேட்டு!

எனச் சுட்டிக்காட்டினார்

'கழகம் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட எப்படியும் முயற்சிக்கும்?'—என, 'வாக்குக் கொடுத்தேன்' என்ற கருத்தில் பேசினர்கள்.

வாக்குறுதி அளித்ததனை—நிறைவேற்றியிருப்பதன் இரண்டாம் கட்டத்தினை நேற்றையத் தினம், மத்திய உணவு அமைச்சரே நேருக்கு நேர் கண்டு கொண்டார்! அது மட்டுமல்ல—பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்!

"தஞ்சையில் நடந்த இந்த ஏ.டி.டி -27 நெல் உற்பத்தியின் அமைதியான புரட்சி பற்றித் தமிழகத்தின் நெற்களஞ்சியம் மாநிலத்துக்கு மட்டுமல்லாமல், இந்தவகையில், இந்தியாவுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது" என்று அவர் பேசியபோது, அறிவுக் களஞ்சியமான அண்ணுவின் ஆட்சி பதவியேற்ற ஏழாவது மாதத்தில் பொறித்துள்ள சிறப்பு முத்திரை, பளிச்சிட்டுத் தெரிகிறது!

"தஞ்சைக் குறுவை அறுவடை இப்படிப்பட்ட வகையில் நேற்று துவக்கப்பட்டிருப்பதற்கு, 1947-க்கு முன்னால் சான்று இல்லை" என்று கூறுவது பொருத்தம் இல்லை—தேவை கிடையாது என்றாலும், கடந்த இருபதாண்டுகளில் நடைபெறாத இந்த வைபவம், கழக ஆட்சியின் ஏழாவது திங்களில், கோலாகலத்துக்கு ஊடே நடந்திருப்பது 1967 கொடுத்த அரசியல் மாற்றத்தினை உறுதிப்படுத்துகிறது!

அண்ணு அவர்களின் இதயத்தை கசியவைத்த—'பூந்தாழங்குடி துப்பாக்கிப் பிரயோகம்' என்ற—எதிர்பாராது ஏற்பட்ட 'புண்' நேற்று தஞ்சையில் நடைபெற்ற 'அறுவடைத் திருவிழா'வின் மூலம் இயற்கைக்குணத்தினைப் பெற்றிருக்கும் என்பது உறுதி!

சென்ற ஆண்டு இதே நாட்களில்—அதற்கு முன்னைய ஆண்டுகளில்—பல சமயங்களில்—

அரிசிப் பற்றுக்குறை—
அளவு அட்டை—
கடைகளில் வரிசைகள்—
கால்களில் கடுகடுப்பு—
இடையிடையே உயிரிழப்பு—

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

பெய்த மழையும் பேச்சுக்கு உதவியது

அண்ணுவின் 'சாகித்யம்'!

நேற்று (அக். 11) கும்பகோணத்தில், அறிஞர் அண்ணு, மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சி!

அறுவடையான நெல்மணிகளை செயற்கை முறையில் உலர்த்தும் இயந்திரங்களை, ஜெகஜீவன்ராம் துவக்கிவைக்கிறார்!

விழாவின் இடையில் மழை வந்து குறுக்கிடுகிறது!

அண்ணு அவர்கள் பேசும்போது, அதையும் 'சமாளிக்கிறார்'!

எப்படி? கீழே படியுங்கள்:—

"இன்று மாலை இப்படிப் பெய்யும் கன மழையே, இத்தகைய இயந்திரங்கள் எவ்வளவு தேவை என்பதைப் புலப்படுத்துகிறது."

சாகுபடிக்கு தரிசு நிலங்கள்!

நிதியுதவி தருவது மத்திய அரசின் கடமை

ஏழைகளுக்கு வழங்குவதற்கு ஏராளமான நிலம் உண்டு

தஞ்சை, அக். 11—

"உணவு உற்பத்திப் பெருக்குவதில், தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது; இதில் அரசியலுக்கு இடமில்லை; அரைப் பட்டினியுடன் அரசியலை நடத்த இயலாது; எனவே மக்களுக்கு வயிறார உணவு அளிக்க வேண்டும்; கருத்து வேற்றுமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் தஞ்சையில் நடைபெற்ற அரிசி அனுப்பு விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நிலமற்றவர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்துகொடுக்கத் தமிழகத்தில் போதிய நிலமிருக்கிறது.

தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர எங்களுக்கு நிதி தேவைப்படுகிறது; இதை மத்திய அரசுதான் தரவேண்டும். இந்த நிதியைத் தேட நான் அமெரிக்காவுக்கோ அல்லது இங்கிலாந்துக்கோ செல்ல முடியுமா?

மத்திய அரசு, மாநிலங்களுக்கு—குறிப்பாகக் காங்கிரசல்லாத மாநிலங்களுக்கு அதிக அளவுக்கு நிதியுதவி தரவேண்டும்-

நிலச்சுவான்தாரர்கள் தங்கள் நெல்லுக்கு அதிக அளவு விலை கேட்கிறார்கள்; இது எப்படி இயலும்? அதிக அளவு விலை கொடுத்தால் அதை உபயோகிப்பாளரிடமிருந்துதான் பெற வேண்டும். இதனால், நமக்கே நட்டம்.

விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்க மத்திய அரசுடன் வாதாடிவருகிறேன்.

உர விலையைக் குறைக்கும்படியும் மத்திய அரசுடன் வாதாடி வருகிறேன்.

அமோக விளைச்சலை அளிக்கக் கூடிய புதிய ரக நெல் விதைகளை ஏராளமாகப் பயிரிட்டால்தான் தன்னிறைவு பெற முடியும்.

இந்தியா ஒரு பெரிய விவசாய நாடு—நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அரிசி அனுப்ப இயலாவிட்டால், வேறு என்ன அனுப்புவதற்கு இயலும்?

தமிழகம் உணவில் தன்னிறைவு பெற கடந்த ஆறு மாத காலத்தில் மிகச் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது."

கே. ஏ. மதியழகன்

உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உணவுக் கொள்முதல் திட்டத்தை உண்மையோடு நிறைவேற்றுவதிலும், மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் முயற்சியிலும் தமிழகமே முன்னணியில் இருக்கிறது.

மத்திய அரசு நிர்ணயிக்கிற விலைகளைத் தருவதிலும் தமிழ் நாடு தான் முதலிடம் வகிக்கிறது.

தி. மு. கழகம் பொறுப்பினை ஏற்ற இந்த ஆறு மாத காலத்தில் உணவுப் பஞ்சம் தீர்ந்துவிட்டது.

பற்றுக்குறைப் பகுதிகளுக்கு அடுத்த மூன்று மாதங்களில் இரயில் மூலமும், சாலைப் போக்குவரத்தின் மூலமும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 26 (12—10—67) வியாழன்

முதலமைச்சர் தந்த பரிசு

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தபடி அரசு ஊழியர்களுக்கும், உள்ளாட்சிமன்ற ஊழியர்கள்—அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கும் கிராக்கிப் படியை உயர்த்தியிருக்கிருர். இத்துடன், சென்னை நகர எல்லைக்குட்பட்ட – மாதம் ரூ. 500-க்கு மேற்படாமல் ஊதியம் பெற்றுவருகின்ற அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி வழங்கவும் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

'நகர ஈட்டுப் படி தரவேண்டும்' என்ற கோரிக்கையை, அரசு ஊழியர்கள் சில ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கின்றனர். இருந்தாலும், இன்றுவரை, ஊழியர்களின் இக்கோரிக்கை அலட்சியப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது; இப்பொழுதுதான் முதன்முதலாக – ஊழியர்களின் நீண்டநாளைய கோரிக்கையை–அறிஞர் அண்ணவை முதலமைச்சராகக்கொண்டு செயல்பட்டு வருகின்ற முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்றுக்கொண்டு, நிதி உதவி அளிக்க முன்வந்திருக்கிறது.

ரூ. 150-க்குக் குறைந்த ஊதியம் பெற்றுவருகின்ற அரசாங்க ஊழியர்கள் தங்கள் சம்பளத்தில் பத்துச் சதவிகிதத்தை நகர ஈட்டுப் படியாகப் பெறுவர். இது, குறைந்தபட்சம் ரூ. 7.50 ஆகவும், உயர்ந்தபட்சம் ரூ. 12.50 ஆகவும் இருக்கும்.

இதே நகர ஈட்டுப் படி, ரூ. 150-க்குமேல் ரூ. 500 வரை ஊதியம் பெறுகின்றவர்களுக்கு, அவர்கள் பெற்றுவருகின்ற சம்பளத்தில் 8 சதவிகிதமாக இருக்கும். இப்பிரிவைச் சேர்ந்தவர், ரூ. 12.50 குறைந்தபட்சமாகப் பெறுவர்.

இந்த நகர ஈட்டுப் படியை, சென்னை நகர எல்லைக்குட்பட்ட அரசாங்க ஊழியர்கள், நவம்பர் முதல் தேதி வாங்கக்கூடிய அக்டோபர் மாதச் சம்பளத்துடன் சேர்த்துப் பெறுவர்.

நகர ஈட்டுப் படி வழங்கப்படுவதனுல், தமிழக அரசாங்கத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 65 இலட்சம் கூடுதலாகச் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது; நடைமுறை ஆண்டில், நகரஈட்டுப் படியினுல் தமிழக அரசாங்கத்துக்கு ஆகக்கூடிய மொத்தச் செலவு ரூ. 25 இலட்சமாகும்.

தனது ஊழியர்களுக்கும், ஊராட்சி மன்ற ஊழியர்கள்—அரசு உதவி பெறுகின்ற பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கும் இப்போது தமிழக அரசாங்கம் கொடுக்கத் தீர்மானித்திருக்கின்ற கிராக்கிப் படி உயர்வின் விளைவாக, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7 கோடி செலவாகக்கூடும். அடுத்த நிதி ஆண்டிலிருந்துதான் இந்தச் செலவு அரசாங்கத்தின் பொறுப்பாகிறது.

தமிழக அரசாங்கம் இப்பொழுது அறிவித்திருக்கின்ற கிராக்கிப் படி உயர்வானது, நவம்பர் முதல் தேதியிலிருந்துதான் நடைமுறைக்கு வருகிறது; அதாவது, இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கின்ற கூடுதலான கிராக்கிப் படி, அரசாங்க ஊழியர்கள் டிசம்பர் மாதத்தில் பெறக்கூடிய சம்பளத்துடன் இணைக்கப்படவிருக்கிறது.

நடைமுறை நிதி ஆண்டில் எஞ்சியுள்ள நான்கு மாதங்களுக்கும், தரப்படக்கூடிய புதிய கிராக்கிப் படி மொத்தமாகக் கணக்கிடப்பட்டு, அந்தந்த ஊழியர்களின் பிராவிடண்ட் நிதியுடன் சேர்க்கப்பட்டுவிடும். அடுத்த நிதி ஆண்டு துவக்கத்திலிருந்துதான்—அதாவது, ஏப்ரல் முதல் தேதியில் தரப்படுகின்ற மார்ச்சு மாதச் சம்பளத்தைத் துவக்கமாகக் கொண்டுதான், புதிய கிராக்கிப் படியை ஊழியர்களுக்கு ரொக்கமாகக் கொடுக்கத் தமிழக அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

தமிழக அரசாங்கம் கொடுக்கத் தீர்மானித்துள்ள கூடுதலான கிராக்கிம் படி, இந்திய அரசாங்க ஊழியர்களுக்குத் தரப்பட்டு வருகின்ற கிராக்கிப் படிக்குச் சமமானதாகும். இந்தக் கிராக்கிப் படிப் பிரிவில் அடிமட்டத்தில் இருக்கின்றவர்கள், மத்திய அரசாங்க ஊழியர்கள் பெற்றுவருகின்ற கிராக்கிப் படியைவிடக் கொஞ்சம் கூடுதலாகப் பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ரூ. 90-க்கும் குறைந்த சம்பளம் வாங்கிவருகின்ற ஊழியர்கள்; இப்பொழுது கிராக்கிப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ. 47 பெற்றுவருகின்றனர்; இனி அவர்கள், மொத்தத்தில் ரூ. 59 பெற்றுவருவர்; அதாவது, மாதம் ஒன்றுக்கு ரூ. 12 கூடுதலாகப் பெறுவர்.

இந்தக் கிராக்கிப் படி உயர்வு, ரூ. 500 முதற்கொண்டு ரூ. 1000 வரையில் ஊதியம் பெறுகின்றவர்களுக்கு இப்பொழுது கிராக்கிப் படியாகக் கொடுக்கப்பட்டு வரக்கூடிய ரூ. 120-ல் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

தமிழக அரசாங்கத்தின் இப்புதிய கிராக்கிப் படி உயர்வை, தொடர்புடைய ஊழியர்களின் அமைப்புகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளன; இதற்காகப் பொதுவாகத் தமிழக அரசையும், குறிப்பாக முதலமைச்சர் அண்ணு அவர்களையும் ஊழியர்களின் அமைப்புக்கள் வாழ்த்தியுள்ளன.

சென்னை நகர அரசிதழ் பதிவு பெருத ஊழியர்களின் அமைப்பு வருகிற தீபாவளிப் பண்டிகையை, 'அண்ணு தீபாவளி'யாகக் கொண்டாடப் போவதாக அறிவித்திருக்கிறது.

தமிழக அரசாங்கத் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் பல பகுதிகளில் அண்ணு படம்—அச்சிடப்பட்ட புதிய கிராக்கிப் படி விகிதம்—நகர ஈட்டுப் படி அறிவிப்புத் தாள்கள் ஒட்டப்பட்டுள்ளன. அரசாங்க ஊழியர் முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கின்ற விளம்பரத் தாள்களும் ஒட்டப்பட்டுள்ளன.

இறுதியாகக் குறிப்பிட்டிருக்கின்ற இவ்விரண்டு நிகழ்ச்சிகளைக் கொண்டே, தமிழக அரசாங்கத்தின் புதிய கிராக்கிப் படி உயர்வும், முதன் முதலாகத் தரப்பட்டிருக்கின்ற நகர ஈட்டுப் படி ஏற்பாடும், எத்தகைய மகிழ்ச்சியை தொடர்புடைய ஊழியர்களுக்குத் தந்திருக்கிறது என்பதை தமிழக மக்களால் உணர்ந்துகொள்ள முடியும்.

தனது ஊழியர்களின் துன்பத்தைத் துடைப்பதில் முதலமைச்சர் அண்ணு அவர்களும், தமிழக அரசாங்கமும் கொண்டிருக்கின்ற அக்கறையும் கவலையும் எந்த அளவுக்குத் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது என்பதையும் இதன் வாயிலாக மக்கள் தெரிந்து கொள்ளுவர் என்பதில் ஐயமில்லை.

—கா. க.

காக்காய் கறுப்பு நிறம் -- சந்தேகமில்லை!
கருத்திருமன் எதிர்க் கட்சித் தலைவர் -- சந்தேகமில்லை!

ஒரு கையினுல் ஓசை உண்டாக்க முடியுமா?

ஒன்ருேடு இன்ஞென்று சேர்க்காமல் இரண்டாகுமா?

ஆனுல் தமிழகத்து எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன், இதில் வித்தகர்!

இதோ ஒரு சவால் விடுகிருர் கேளுங்கள்:—

"கடந்த 20 ஆண்டுகளில் மத்திய ஆட்சியிலும், மாநில நிர்வாகங்களிலும் காங்கிரசு, நாட்டு அபிவிருத்திக்காக எதையுமே செய்யவில்லை என்பதை நிருபிக்க முடியுமா?"

'காவியக் கம்பனின் இரட்சகர்' என்று கருதப்படும் கருத்திருமன், கோவைக் கூட்டமொன்றில் கேட்டிருக்கிருர் இப்படி!

"சவால், சவால் என்கிருர்களே—நாமும் ஒன்று விட்டுப் பார்ப்போமே" என்று, விஷப் பரீட்சையில் இறங்கியிருக்கிருர் எதிர்க் கட்சித் தலைவர்!

20 ஆண்டுக் காலக் காங்கிரசு நிர்வாகங்களைப் பற்றி இப்போது இரண்டு வகைகளில் பேசப்பட்டு வருகிறது.

★ 20 ஆண்டுக் காலமாகக் காங்கிரசு சாதிக்காதவைகளை, 1967-க்குப் பின் ஆறே மாத காலத்தில் எதிர்க் கட்சி அரசுகள்—பல்வேறு மாநிலங்களிலும், தமிழகத்தில் குறிப்பாகக் கழக நிர்வாகமும் சாதித்திருக்கின்றன!

★ இடைவிடாத—இடர்ப்பாடு இல்லாத 20 ஆண்டுக் காலத்தில் சாதாரண திறமை படைத்த எந்த நிர்வாகமும், காங்கிரசு இந்தியாவில் உருவாக்கியிருக்கும் சாதனைகளைவிட இன்னும் எவ்வளவோ செய்திருக்க வேண்டும்.

★ பொதுமக்களின் உழைப்பு, தியாகம், பொதுப் பணம், நிதி வசதி ஆகியவைகளைக் காங்கிரசு பெற்ற அளவுக்கு, அது ஆற்றிய கடமைகள்—புரிந்த சாதனைகள், குறைவானது மட்டுமல்ல—பழுதுபட்டவையும் குறைபாடுடையவையுமாகும்!

★ இந்தியாவைப் போன்ற அல்லது இந்தியாவைவிடப் பின்தங்கிய நாடுகள், சில பல துறைகளில் ஆற்றியுள்ள சாதனைகளைவிட, காங்கிரசு நிர்வாகம் ஆற்றிய சா[illegible]கள் குறைவு மட்டுமல்[illegible]—பல துறைகளில் ஒன்று[illegible]ம இல்லை!

இந்த உண்மைகளைத்தான் [illegible]திர்க் கட்சிகள், இருபதாண்டு[illegible] காலமாகக் கூறிவந்தன!

ஆனுல் கருத்திருமன் — இருட்டறையில் இல்லாத கறுப்புப் பூனையை — 'விட்டேனு பார்' என்று கண்ணைக் கட்டிக்கொண்டு தேடப்பார்க்கிருர்!

'எதையுமே செய்யாதவர்கள்' என்று—யார் ஐயா உங்களைச் சொன்னது?

செய்தது போதாது

அல்லது

செய்ததும் பழுதுடையது-- குறைபாடுடையது

என்றுதான் எப்போதுமே கூறப்பட்டுள்ளது!

'காகம் கறுப்பு நிறமன்று' என எவராகிலும் கூறினுல்தானே, கருத்திருமன், 'யார் சொன்னது—கறுப்பு நிறம்தான்' என்று கூறி, சந்தேகத்தைப் போக்க வேண்டும்—சவால்விட வேண்டும்!

'கருத்திருமன், எதிர்க் கட்சித் தலைவரன்று' என எவராவது கூறியிருந்தால்தானே கோவைக் கம்பர், சவால்விடும் அரசியலில் இறங்கியிருக்க வேண்டும்!

'காக்காய் கறுப்பு நிறம்' என்று தெரிந்துகொண்டதைக் காட்டுவதற்காக, 'காகத்தின் நிறம் என்ன தெரியுமா?' என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு—'கறுப்பு' என்று பதில் தந்து—'சந்தேகம் கூடாது' என்ற உறுதிப்பாட்டையும் கருத்திருமன் தர முன்வருவது, அவரது பாண்டித்தியத்தைத்தான் சந்தேகத்துக்கு உள்ளாக்குகிறது!

'பாக்சர்,

என்ன பிறப்பு-- என்னென்ன பரிசு!

"இராமசாமியின் வெற்றியே நாம் பக்தவத்சலத்துக்குத் தரும் பிறந்த தினப் பரிசாகும்" என்று மத்திய உள்துறை துணை அமைச்சர் கே. எஸ். இராமசாமி, பக்தவத்சலம் 71-வது பிறந்த நாளில் பேசியிருக்கிருர்."

"பெற்ற சுதந்தரத்தைக் கொண்டாடிய சுதந்தரத் தின விழாவிலும் நமது தோழர்கள் இரத்தம் சிந்தினர்! அன்று சுதந்தரத் தின விழா பரிசு தந்ததுபோல், சுதந்தரத்துக்காகப் போராடிய தியாகி பக்தவத்சலம் பிறந்த தினத்துக்கும் இந்தப்பரிசை (போலீசார் காங்கிரசுக்காரர்களைத் தாக்கினுர்கள் என்ற புரளி) தி.மு.க. வழங்கியிருக்கிறது."

—ஓ. வி. அழகேசன்

பாவம், மனிதர்! எந்தப் பரிசை என்று வாங்கிக் கொள்வார்! சட்டகர் கற்பனையில் உதித்த அரசியல் பரிசைப் பெறுவாரா? கட்சியின் மத்திய அமைச்சர் தரும் அன்புப் பரிசை ஏற்பாரா?

குடும்பத்து உறவுக்காரர் தரும் பரிசையும் பாருங்கள்—அரசியல் உறவுக்காரர் தந்திருக்கும் பரிசையும் பாருங்கள்!

முன்னவர், 'பெறலாம்' எனக் கனவு காணும் வெற்றியை, பிறந்த நாள் பரிசாக்கியிருக்கிருர்!

பின்னவர்—சட்டகர்—அழகேசனே, காங்கிரசார் பெற்றதாக அவர் புரளிப் பேச்சுக்கு உதவும் 'அடி-உ[illegible]த'களை, அன்புப் பரிசாக ஆக்கியிருக்கிருர்!

71-வது பிறந்த நாளைக் கொண்டாடிய பக்தவத்சலத்துக்கு இப்படிப்பட்ட 'இல்லாத' பரிசுகள்தானு கிடைக்க வேண்டும்?

'அம்புலி' காட்டியிருக்கிருர்கள்—ஆண்டு அனுபவித்ததால், 'குழந்தை'யாக மாறியிருக்கும் முதியவருக்கு!

—'பாக்சர்'

பகை மடிய....!

"போட்டியும், பூசலும், பகையுமே வளர்ச்சிக்கு அறிகுறி—என்றுள்ள இக்காலத்தில், நம்மிடையே தோன்றும் பகையை மடியச் செய்ய நல்லுணர்வு அவசியமாகும்.

"சனநாயகத்தைஏற்றுக்கொண்டுள்ள நம்மிடையே கருத்து வேறுபாடு இருந்தே தீரும்—இருக்க வேண்டும்—இருப்பது முறை; ஆயினும், ஒருவர் செய்யும் நல்ல காரியத்தை மற்றவர் பாராட்டுவதும், மதித்து நடப்பதும் தேவையான பண்பாகும்.

"'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்றனர் நம் முன்னேர்! ஆங்கில இலக்கிய மேதை மாத்யூ ஆர்னல்ட், 'பெரிய மனிதர் யார்?' என்ற கேள்விக்கு பதில் சொல்லியபோது, 'மாளிகையில் இருப்பவரல்லர்; படித்துப் பட்டம் பெற்றவரல்லர்; பலகோடி சொத்துடையோரல்லர்; இதயம் படைத்தோர்தான்' என்று கூறியிருக்கிருர்! இதனை அனைவரும் உணருதல் வேண்டும்"

---அறிஞர் அண்ணு

பிரிவினைக் குரல்!

அசாமில் இன்னெரு பிரிவினைக் குரல் எழும்பியுள்ளது!

லக்கிமிப்பூர், சிப்சகார் மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் அசாமைத் தன்னுட்சிப் பகுதியாக்க வேண்டுமென்று 'ஆகோமர்' கோரிக்கை எழுப்புகின்றனர்!

'அனைத்து அசாம் ஆகோமர் சங்கம்', இது குறித்துப் பத்துப் பக்க விண்ணப்பம் ஒன்றை மத்திற உள்துறை அமைச்சரிடம் அளித்திருக்கிறது.

அசாம்–நாகாலாந்து—நேபா—மணிப்புரி–திரிபுரா ஆகியன அடங்கிய கிழக்குப் பகுதிகள் அனைத்தையும் பரவலாக ஒருங்கிணைக்கும் வாய்ப்பின் அடிப்படையில் அசாமைக் கூட்டாட்சியாகச் சீரமைக்க வேண்டும் என்ற கொள்கையை அச்சங்கம் ஆதரிக்கிறது.

அமெரிக்காவில் இரா. செழியன்

விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் காந்தி -- நேரு -- அண்ணு காலம் பற்றி விளக்கம்

மடிசன், அக். 1—

அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுள்ள தோழர் இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள், விஸ்கான்சின் பல்கலைக் கழகத்துக்கு செப்டம்பர் 27-ம் நாள் வந்தார்.

செப். 28-ம் நாள் தோழர் செழியன் அவர்களை வரவேற்று இந்தியப் பகுதித் தலைவர் பேராசிரியர் ஹார்ட், ஒரு தேநீர் விருந்து அளித்தார்.

இந்தியப் பகுதியில் உள்ள பேராசிரியர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் கலந்துகொண்டனர்.

'இந்திய அரசியல் வளர்ச்சி' என்பது பற்றித் தோழர் செழியன் பேசினுர்.

அரசியலில் மக்கள் ஈடுபடுத்தப் பட்ட அண்ணல் காந்தியார் காலமும், சனநாயக ஆக்கத்துக்கு வழிகோலிய பண்டித நேரு காலமும், ஆளுங் கட்சி—எதிர்க்கட்சிப் பாகுபாட்டில் உண்டாகும் சனநாயக மாறுதலுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் அறிஞர் அண்ணு காலமும், படிப்படியாக சனநாயகம் வளர்ந்துள்ள தன்மையையும் பற்றி தோழர் செழியன் அவர்கள் எடுத்துக் கூறினுர்; பிறகு கேள்விகளுக்குத் தக்க பதில் தந்தார்.

செப். 29-ம் நாள் தோழர் செழியன் அவர்களும், இந்திய ஒப்பியல் பேராசிரியர் மாட்சன் அவர்களும் நிகழ்த்திய உரையாடல் ஊளக்க உரை ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

தோழர் செழியன் விஸ்கான்சன் பல்கலைக் கழகத்தில் தங்கியிருந்த மூன்று நாட்களில் இந்திய மாணவர்களையும், தமிழக மாணவர்களையும் சந்திந்தார்கள்.

மடிசன் நகரிலுள்ள விஸ்கான்சன் பல்கலைக் கழகத்தில் 34,000 மாணவர்கள் ஒரே பகுதியில் பயில்கின்றனர்.

வியட்நாம் போரில் ஏற்பட்ட இழப்பு!

வியட்நாமில் நடைபெறும் போரில் இதுவரை 1,01,034 பேர்களை அமெரிக்கா இழந்திருப்பதாகத் தெரிகிறது: இவர்களில் 13,643 பேர் இறந்திருக்கிருர்கள்; 86,635 பேர் காயமடைந்துள்ளனர்; 756 பேர் காணுமலும், கைதிகளாகப் பிடிக்கப்பட்டுமிருக்கின்றனர்.

1961-ம் ஆண்டிலிருந்து இதுவரை 50,000 பேர்களை தென் வியட்நாம் இழந்திருக்கிறது.

போரில், வியட்காங் இயக்கத்தைச் சேர்ந்த 2,28,000 பேர் கொல்லப்பட்டதாகவும் அத்தகவல் மூலம் தெரியவருகிறது.

எதிர்பார்த்ததற்கு எதிரான பலன்!

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மக்களிடையே பரப்புவதற்காக இந்திய அரசு பல்வேறு முறைகளைக் கையாண்டு வருகிறது.

'படிப்பில்லாத நாட்டுப்புற மக்களும் எளிதில் புரிந்துகொள்ள வேண்டும்' என்பதற்காக, அது ஒருமுறை, சில விளம்பரப் படங்களை அச்சிட்டிருந்தது.

படத்தின் ஒருபுறத்தில் 8—10 குழந்தைகள் நிறைந்த ஒரு குடும்பம் காட்டப்பட்டிருந்தது; கிழிந்த ஆடைகளும், வறுமைக் கோலமும், அந்தக் குடும்பம் எவ்வளவு சீரழிந்த நிலையில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டிருந்தன! மற்ருெருபுறத்தில் இரண்டே, இரண்டு குழந்தைகள் உள்ள ஒரு குடும்பம் செழிப்பில் திளைப்பதாகக் காட்டப்பட்டிருந்தது!

இந்த விளம்பரத்தைப் பற்றி மக்கள் கருத்து அறியப்பட்ட பொழுது, இரண்டாவது படத்தைப் பற்றிக் கிராமத்துக் கிழவி ஒருத்தி கூறியிருந்த கருத்து, அரசினரை அதிர்ச்சியுறச் செய்திருக்கிறது.

"பாவம், எல்லா பேற்றையும் இந்தக் குடும்பத்துக்கு அளித்த அந்தக் கடவுள், இவர்களுக்கு இரண்டே இரண்டு குழந்தைகள்தானு தரவேண்டும்?" என்று வருந்திஞளாம், அந்தக் கிழவி!

—'தினமான்'

இந்தியைத் திணிக்கமுடியாது

அவுரங்காபாத், அக். 12—

"சனநாயக ஆட்சி நடத்தும் நாடு, விருப்பப்படாத தென்னக மக்கள்மீதும், வங்க மக்கள்மீதும் இந்தியைத் திணிக்கமுடியாது.

"அனைத்திந்திய மொழியாகவும், மற்ற நாடுகளுக்குக் கடிதப் போக்குவரத்துக்கும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

"பள்ளிகள்—கல்லூரிகளில் சில கட்டங்களில் ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். இந்தி உள்ளிட்ட பல வட்டார மொழிகள் வளர்ச்சியடையாமலிருக்கையில், ஆங்கிலத்தைக் கைவிடுவது புத்திசாலித்தனமல்ல"

--டாக்டர் சந்திரசேகர்
(மத்திய சுகாதார அமைச்சர்)

ஊராட்சிமன்ற இடைத் தேர்தல்கள்

கீரனூர்

குளத்தூர் வட்டம் குன்றுண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியம் கிள்ளிக்கோட்டை ஊராட்சியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தி. மு. கழக உறுப்பினர் திரு. மு. பிச்சை அதிகப்படியான ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுர்; காங்கிரசு வேட்பாளர் படுதோல்வியடைந்தார்.

நாவினிப்பட்டி

22—9—67-ல் நடைபெற்ற நாவினிப்பட்டி ஊராட்சிமன்ற இடைத் தேர்தலில் தி. மு. க. கிளையின் செயலாளர் வா. முகமது கனி 335 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுர். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இளைஞர் காங்கிரசு உறுப்பினர் வே. மாடசாமி 161 வாக்குகள் பெற்றுத் தோற்றுர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று செய்திகள் வெளிவந்ததனையும், 1967 கொடுத்த அரசியல் மாற்றத்துக்குப் பின்னர்,

'அவைபோன்ற செய்திகள் ஏதும் இதுவரையில் வரவில்லை' என்பது மட்டுமன்றி, 'இனி வராது' என்பதற்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டமும், நேற்று தஞ்சையில் நடந்த அறுவடைத் திருவிழாவும் இருவகைகளில் எடுத்துக்காட்டாக இருக்கின்றன!

1967-க்குப் பின்னரும், அதற்கு முன்னால் இருந்த தஞ்சை தான்!

அங்கே உள்ள உழவர்கள்—உடமைக்காரர்கள்—அதிகாரிகள்—வல்லுநர்கள் ஆகியோர் அப்போதும் இருந்தவர்கள்தான்—இப்போதும் இருப்பவர்கள்தான்!

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையும் அதேதான்!

அங்கே இருக்கும் நிர்வாக இயந்திரமும் முன்பு இருந்தது தான்!

மாறியிருப்பது அமைச்சரவை ஒன்றுதான்!

அதனால், உணவுத் துறையில் நிகழ்ந்திருக்கும் இரண்டாவது கட்ட வளர்ச்சிதான், நேற்று தஞ்சையில் நடைபெற்ற நிகழ்ச்சி!

சென்னை சீரணியின் சிறப்புமிக்கபணி

கல்லூரி மாணவ -- மாணவியர் பங்கேற்பு

12.10.67

தொண்டர்களுக்கு அமைச்சரின் பாராட்டு

சென்னை வியாசர்பாடி 32-வது வட்டம் கலியாணபுரம் பகுதியில் 5—10—67 அன்று அறிஞர் அண்ணா அவர்களால் மழை வடிகால் கால்வாய் வெட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து தோழர்கள் டில்லிராஜ், மணிவண்ணன், எத்திராசன் ஆகியோர் தலைமையில் மூன்று பிரிவுகளாகவும், பெண்கள் பிரிவில் திருமதி அலமேலு அப்பாதுரை தலைமையிலும் தொடர்ந்து சென்னைச் சீரணியினர் கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

10—10—67 அன்று விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பார்வையிட்டு, சீரணித் தொண்டர்களைப் பாராட்டினார்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சுமார் 60 பேர், மாணவர் சனார்த்தனம் தலைமையில் விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களுடன் சேர்ந்து கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபட்டனர்.

11—10—67 அன்று கால்வாய் வெட்டும் பணியினை பூங்கா நகர் சட்டமன்ற உறுப்பினர் எச். வி. ஹண்டே அவர்கள் பார்வையிட்டு தொண்டர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறிதுநேரம் அவர்களுடன் பணியாற்றினர்; தொண்டர்களைப் பாராட்டினார்.

சீரணி தனி அதிகாரி பரமசாமி அவர்கள், சட்டமன்ற உறுப்பினரை வரவேற்று, சீரணியினர் செய்துவரும் பணிகளை விளக்கினார்.

சுமார் 200 தொண்டர்கள்—ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

பணியாற்றியவர்களுக்கு கலியாணபுரம் கென்னடி நகரைச் சேர்ந்த தோழர் நடேசனும் அவருடைய மனைவியார் கெங்கம்மாளும் பகலுணவும், மாலையில் தேநீரும் வழங்கினர்.

"அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமையில் 13-ந்தேதியன்று, அப்பகுதியைச் சேர்ந்த மகளிரும், 17-ந்தேதியன்று கல்லூரி மாணவிகளும் கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபடுவர்"

என்று வடசென்னை சீரணி செயலாளர் சு. பாலன் எம்.சி. அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

13--10--67

சென்னை 6-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு நா. நா. தோட்டம் 8 வது சந்தில்; தலைவர்: அ லோகநாதன்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, சட்டப் பேரவைத் தலைவர்: சி. பா. ஆதித்தனார், இளம்பரிதி, கே. எம். கண்ணபிரான், எம். எஸ். மணி, வீரஜின்னு, மு. இராமையா, கே. குசால்தாஸ், வெங்கடேசன் எம்.சி., எம். எஸ். கே. உலகநாதன், வெ. நாராயணன்.

சிருவானூர்

தி.மு.க. சார்பில் மாலை 5—மணிக்கு ஊராட்சி ஒன்றியப் பள்ளித் திடலில்; தலைவர்: இரா. வரதராசன்; பேசுவோர்: தில்லை வில்லாளன் எம்.ஏ.பி.எல்., புலவர் கூ. ஆறுமுகம், அ. சே. குமாரசாமி பி.எஸ்சி., தி. வ. அண்ணாதாசன், வை.க. பாண்டுரங்கன், ம. கண்ணன்.

குழுக் கூட்டம்

சென்னை 92-வதுவட்டம் கலைஞர் கருணாநிதி மன்றப் பொது [illegible]றுப்பினர் கூட்டம், 14—10—67 மாலை 6 மணிக்கு காமராசர் காலனி, 30-ம் எண்ணுள்ள பணிமனையில், ஏ. எஸ். இராமன் தலைமையில் நடைபெறும்.

கடலைப் பருப்பு

கூடுதலாகக் கிடைக்க ஏற்பாடு

சென்னை அக். 11—

சென்னை உணவு வழங்குத் துறை துணை ஆணையர் (வடக்கு) எம். அருளானந்தம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"அடுத்துவரும் பண்டிகைகளை முன்னிட்டு, நகரில் உள்ள எல்லா அரசு பங்கீட்டுக் கடைகள், மாதர் கூட்டுறவுப் பண்டகசாலை உட்பட எல்லா கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் கொத்துக் கடலை, கடலைப் பருப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கும் ஒரு கிலோ கொத்துக் கடலையும்; ஒரு கிலோ கடலைப் பருப்பும் கொடுக்கப்படும்.

மாஜிஸ்திரேட் உத்தரவு

சென்னை, அக். 11—

சென்னை நகரில் நடைபெற்ற தீ விபத்துக்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பட்டு, வேணு, அரிராம், எட்டி என்ற நான்கு எதிரிகளையும் செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்ப எழும்பூர் 7-வது மாகாண மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

"கருப்பட்டி, வெல்லம் போக்குவரத்திற்குத் தடை விதிக்க வேண்டும் எனக் கோரும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அனுமதி அளிக்காது" என்று மத்திய உணவமைச்சர் ஜெகசீவன்ராம் கூறினார்.

இந்திய அரசியலில் ஒரு நட்சத்திரம் வீழ்ந்தது!

டாக்டர் லோகியா மறைந்தார்

காந்தியார் மெச்சிய மேதை--பண்டித நேருவை எதிர்த்த துணிவுக்காரர்!

'சிறு பிள்ளை அரசியல்வாதி'யாக இருந்து பாராளுமன்ற 'பெரிய' உறுப்பினராக வந்தவர்!

43 ஆண்டுக்கால பொதுவாழ்க்கை நேற்று நடு இரவில் நின்றது

1910-ம் ஆண்டு பிறந்து—பம்பாய், காசி, கல்கத்தா, பெர்லின் ஆகிய இடங்களில் படித்து—1924-ம் ஆண்டில்--பதினான்காம் வயதிலேயே 'பால அரசியல்வாதி'யாகி—கயா காங்கிரசு மாநாட்டில் பார்வையாளராகப் பங்கு பெற்று—நாட்டின் சுதந்தரத்துக்காகப் போராடிச் சிறை சென்று—'பிரிட்டிஷ் முடி மன்னருக்கு பதவி உறுதிமொழி தந்து அதன் மூலம் இடம் பெறுவதா' என இடைக்கால மத்திய சட்டசபையில் தரப்பட்ட உறுப்பினர் பதவியை, 'வேண்டாம்' என ஒதுக்கி—பின்னர், காங்கிரசுடன் கருத்து வேற்றுமை கொண்டு மது லிமாயி, அசோக்மேத்தா ஆகியோர் துணையுடன் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி அமைத்து—பின்னர், மீண்டும் மது லிமாயியை அழைத்துக்கொண்டு, 'சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி' எனும் அமைப்பைக் கண்டு—1956-ல் அதன் தலைவராக இருந்து—மூன்றாவது மக்கள் சபையில், 'முன்னணிப் பேச்சாளர்' என்ற முத்திரையைப் பொதித்து—தற்போதைய நாடாளுமன்றத்திலும், 'கவனத்தை ஈர்ப்ப[illegible]களில் ஒருவராக' இருந்து—சிறுநீர்ப் பை கோளாறு காரணமாக புதுடில்லி வெல்[illegible]ங்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு—சென்ற 30-ந் தேதி அதற்கான அறுவை சிகிச்சை மேற்கொண்டதனையொட்டி கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உடல் நிலை மோசமாகி—'மருந்துகள் இனி பலனளிக்காது' என மருத்துவர்களு[illegible] கைவிடப்பட்ட நிலையில்—டாக்டர் ராம் மனோகர் லோகியா, இன்று (அக். 12) அதிகாலை 1.05 மணியளவில் உயிர் துறந்திருக்கிறார்!

அவரது மறைவு, இந்திய அரசியலில் இனி நிறைவு செய்ய முடியாத ஒரு வெறுமையைத் தோற்றுவித்திருக்கிறது.

கவனிக்கத் தகுந்த ஒரு பொது மனிதரை, நாடு இழந்திருக்கிறது!

காங்கிரசில் இருந்தபோதே, சோஷலிசத் தத்துவங்களில் தீவிர ஆர்வம் காட்டிய டாக்டர் லோகியாவின் அறிவுத் திறமையை மெச்சிய காந்தியடிகள், அவரை, 'உடல் முழுவதும் மூளையுடையவர்' என்று மெச்சிப் புகழ்ந்ததுண்டாம்!

அவர் பெயரோடு தொடர்புகொண்ட 'Mankind' என்னும் ஏடு, 'எண்ணிக்கை பலம்' இல்லாவிட்டாலும்—'எண்ண பலம்' உடையோர் மத்தியில் மதிப்பான வரவேற்பைப் பெற்றிருந்தது!

அவர் தனது பொது வாழ்வில் மூன்று முறை கட்சி மாறவேண்டிய நிலை வந்தபோதும், மக்கள் அவரை உன்னிப்பாகக் கவனித்து வரத தவறியதில்லை!

ஏறத்தாழ அன்றாட அரசியல் சிந்தனைகளில் வந்துபோகக்கூடிய முக்கிய மனிதர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் டாக்டர் லோகியா!

நேருவை, 'தெய்வத்தின் அவதாரம்' என மதித்து வந்த உத்தரப் பிரதேசத்திற்கே சென்று—1962-ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு—அரசியலின் மதிப்பை உயர்த்திக் காட்டியவர் லோகியா!

தான் 'சரி' என்று நம்புவதை, அசாத்திய—சில சமயம்—அசாதாரணத் துணிவுடன் பேசும் அரசியல் கதாபாத்திரங்களில், டாக்டர் லோகியா முன்னணியில் இருந்தவர்! இந்தக் குணாதிசயம்தான் அவரை, ஒரு 'ஜனரஞ்சக'த் தலைவராக மாற்றியது என்றுகூடச் சொல்லலாம்.

சுதந்தரத்துக்காகப் போராடிய காலந்தொட்டே காங்கிரசின் நடவடிக்கைகளில், வெளிநாட்டு விவகாரங்கள் பற்றிய அரசியலையும் சேர்த்த பெருமை நேருவுக்கு உண்டென்றால், அவரது ஊக்குவிப்பின்பேரில் காங்கிரசு அமைப்பில் வெளிவிவகாரத்துக்கென ஒரு அலுவலகமே துவக்கிய சிறப்பு, லோகியாவுக்கு உண்டு!

இந்தி மொழி பேசாதோர் மத்தியில் டாக்டர் லோகியா ஒருவித முகச் சுளிப்பைப் பெற்றாரென்றால், அது, மொழி பற்றிய கருத்துக்களில் தான்!

பிறவித் துணிவு, மொழித் துறையில் மட்டும் அவருக்கு சில பல கசப்பான அனுபவங்களைத் தான் பெற்றுக் கொடுத்திருக்கிறது!

"நான் இந்தி வெறியன் அல்லன்—ஆங்கில எதிர்ப்பாளன்" என்று, உலகை அறிந்த லோகியா கூறினாலும், அளவுக்கு மீறிய அவரது ஆங்கில எதிர்ப்பு உணர்ச்சிதான், இந்தி மொழி பேசாதோர் மத்தியில், அவருக்கு, 'இந்தி வெறியர்' என்ற பிரதிபலிப்பைப் பெற்றுத் தந்தது என்பதனை—இன்னும் சற்று காலம் இருந்திருந்தால்—அவரே உணர்ந்திருக்கக்கூடும்.

1947-க்குப் பின்னர் பழைய அத்தியாயத்தை முடித்துக்கோண்டு பதவி அரசியலுக்குப் பலர் வந்துவிட்டாலும், காங்கிரசில் இருந்தபோதும் சரி—அதனைவிட்டு வெளியே வந்தபோதும் சரி—'போராடும் அரசியலி'லேயே வாழ்வைக் கழித்தவர் டாக்டர் லோகியா!

அத்தகைய ஒரு மனிதர், கடைசி நாட்களிலும் தன் உயிருக்காகப் போராடியே மடிந்தது, மக்கள் இதயங்களில் தாள இயலாத வேதனையை விளைவித்தது!

—எஸ். ஆர்.

கொள்முதல்--கூடுதல் விலை!

அண்ணா விளக்கம்

"மற்ற மாநிலங்களில் அரசுகள் கொள்முதல் செய்வது—அதற்கான கூடுதல் விலைகளைத் தருவது, தானியங்களை வெளியாருக்கு நல்ல விலைக்கு விற்பதனால் முடிகிறது!

"தமிழக அரசு கொள்முதல் செய்வது, இங்கேயே உள்ள வசதியற்றோர் 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி பெற வேண்டும்' எனற தூய நோக்கத்துக்காக! **இலாப விலைக்கு விற்பதற்காக அல்ல!**

"'படி அரிசித் திட்டமும் இருக்க வேண்டும்; கொள்முதலுக்குக் கூடுதல் விலையும் வேண்டும்' என்பது இயலாத காரியம்—ஒவ்வாத நிலை!"

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு அனுப்பி வைக்கப் படும்."

ஏ. கோவிந்தசாமி

வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி விழாவில் பேசும் போது குறிப்பிட்டதாவது:—

"தமிழக அரசின் உணவுக் கொள் முதல் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வர நல்ல ஒருங்கிணைந்த ஒத்துழைப்பினை அளித்த எல்லாத்துறை அதிகாரிகளும் பாராட்டப்பட வேண்டியவர்கள்; அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை [illegible]) அச்சிட்டு வெளியிடப்பட்டது.